JAC JOSHAM

# JAC JOURNAL OF SCIENCE, HUMANITIES AND MANAGEMENT

(A National Journal)

Vol.5, No.2 June 2018 ISSN 2347-9868

**Published by**

JAYARAJ ANNAPACKIAM COLLEGE FOR WOMEN (Autonomous)
Accredited at 'A' Grade in 3rd Cycle by NAAC
Affiliated to Mother Teresa Women's University, Kodaikanal
PERIYAKULAM - 625 601, TAMIL NADU
www.annejac.com

# CONTENTS


| S. No. | Title and Author(s) | Page No. |
|---|---|---|
| 1. | **Electrochemical and Surface Analysis Studies on Corrosion Inhibition of Aluminium by an Eco-Friendly Inhibitor in Alkaline Medium**<br>*G. Oviya and C. Mary Anbarasi** | 1 |
| 2. | **Synthesis, spectral characterization and pharmaceutical activity of Schiff base metal [Cu(II) and Zn(II)] complexes derived from benzaldehyde derivatives**<br>*C. Kanagavalli[1] and M. Kalanithi[2]** | 13 |
| 3. | **Quest for Self identity in Meena Kandasamy's novel 'When I hit you: Or, a portrait of the Artist as a young Wife'**<br>*J. Josephine** | 22 |
| 4. | **A Study of Homi. K. Bhabha's 'Mimicry' in Tsitsi Dangarembga's *Nervous Conditions***<br>*A. Monika** | 26 |
| 5. | **Colonial Architectural Legacy in Manjeri**<br>*Shareena Jasmin** | 31 |
| 6. | **Solving Land Use Model with Matrix Representation using Genetic Algorithm**<br>*D. Selvi[1] and G.Velammal[2]* | 41 |
| 7. | **Fruit Mediated Synthesis and Characterisation of ZnO Nanoparticles using Strawberry extract**<br>*S.Vennila[1] and Sr. S. Jesurani[2]* | 52 |
| 8. | **கவிஞர் வைரமுத்து கவிதைகளில் பெண்ணியம்**<br>செ. ரெஜினா | 59 |
| 9. | **நாலடியாரில் நிலையாமை**<br>அ. ஜான்சிமேரி | 64 |

# கவிஞர் வைரமுத்து கவிதைகளில் பெண்ணியம்

முனைவர் செ. ரெஜினா
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி,
பெரியகுளம்.

**முன்னுரை**

'பெண்' என்பவள் மனைவி என்னும் பொறுப்பை ஏற்பதற்கு நிறைய விலை கொடுக்க வேண்டியவளாகிறாள். பெண்ணின் எதிர்பார்ப்புகள், ஏக்கங்களாகி விடுகின்றன. ஊதியமற்ற பணியாளராகிறாள். அவளது உலகம் 'குடும்பம்' என்னும் எல்லைக்குள் கட்டுப்பட்டு விடுகிறது. குழம்பில் உப்பாகக் கரைந்து கொண்டிருக்கிறாள்.

புறக்கண்ணுக்குப் புலப்படாத பல்வேறு தளைகள் அவர்களை இறுக்கிக் கொண்டுள்ளன. வரதட்சணைக் கொடுமை, மாமியார் கொடுமை போன்றவற்றால் பெண்கள் காலங்காலமாகத் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர் என்பதைக் கவிஞர் வைரமுத்துவின் இன்னொரு தேசிய கீதம், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இரத்ததானம் போன்ற கவிதைகளின் வழியாகப் பதிவு செய்துள்ளார். பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் பல்வேறு இன்னல்களையும், துயரங்களையும் துடைப்பதற்காகக் கவிஞர்கள பலர் முன் வந்துள்ளனர். அத்தகைய கவிஞர்களுள் முன்னோடியாகத் திகழ்பவர் கவிஞர் வைரமுத்து ஆவார்.

**அடிமை வாழ்வு**

பாரத நாட்டையும், பாய்ந்திடும் ஆற்றலையும் பெண்ணாக உருவகித்துப் போற்றும் நம்மவர்கள், பெண்களைப் பெண்களாக மதிக்காமல் வெறும் போகப் பொருளாகப் பார்க்கும் நிலை இன்றும் நீடித்து வருகின்றது.

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான" (தொல்.,நூற்பா, 206)

என்று தொல்காப்பியரும்,

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்து சோர்விலாள் பெண்" - 56

என்று வள்ளுவரும் பெண்ணின் இயல்பை எடுத்துரைக்கின்றனர். எனினும் பெண் என்பவள் குழந்தையாக இருக்கும் போது தந்தைக்கும், மணமான பின் கணவனுக்கும், முதுமையில் மகனுக்கும் அடிமைப்பட்டு வாழும் நிலை முற்றிலும் மாறிவிடவில்லை. ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதியாக சமுதாயத்தில் பெண்கள் துன்புறுத்தப்படுகின்றனர். கல்வி கற்று பணியாற்றும் பெண்கள் கூட வீட்டு வேலைகளிலும், வெளியிலும் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடுகின்றது.

**பெண்[illegible]குப் பெண்**

இன்றைய சமுதாயத்தில் புரையோடி உள்ள வரதட்சணை நோயை எவ்வகையிலும் அழிக்க முடியாத நிலையுள்ளது. பெண்களுக்கு இழைக்கப்படும் வரதட்சணைக் கொடுமையை பெண்களே ஒழிக்க முன்வர வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

எங்கே...
சீதைகளே கொஞ்சம்
ஒன்று சேருங்களேன்" (இன்.தே.கீ., ப.20)

என்று கூறி, பெண்களை ஊக்கப்படுத்துகின்றார்.

**பெற்றோரின் பொறுப்பின்மை**

சமூகச் சீர்கேடுகளுக்கு, கிராமப் பெண்களும் விதிவிலக்கல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் அவர்களை இயல்பான சுமைகளோடும், வாழ்க்கையோடும் கவிஞர் சித்திரிப்பதைக் காணலாம்,

"தூரத்து வயல்களில்
தொலைந்து போன தங்கள் வாழ்வை
நிலங்களில் குனிந்து
நிமிராமல் தேடும்
நிரந்தரக் கவிகள்
அங்கே
சேற்றுச் செருப்பணிந்து
வரப்பு நடைப் பயிலும்
வயல் மயில்கள்" (தி.எ.தீர்.,பக். 39-40)

என்று வரும் வரிகள் வழியாக அறிய முடிகிறது.

**பெண்களின் துயர் துடைக்க முயற்சித்தல்**

'குடும்ப நிறுவனம்' ஆணாதிக்கத்திற்கும் மிதமிஞ்சிய மையக் குவியலான அதிகாரத்திற்கும் இடந்தந்து பெண்ணை அடிமைப்படுத்துவது, பெண் அதை விடுத்து வெளியே வந்து அதனை எதிர்த்து மாற்றத்திற்காக மீண்டும் மீண்டும் போராட வேண்டும் என்று மார்க்சீயப் பெண்ணியவாதிகள் அழுத்தமாக வலியுறுத்துகின்றனர்.

"இந்த தேசம்
ஒரு
கனவில் குதித்துக்
கரையேர வேண்டும்
அதற்குப்





பெண்ணின் உதடுகள் அல்ல
நமது கைகளும் கால்களும்
சிவக்க வேண்டும்" (இ.தே.கீ., ப.49)

என்று பெண்களுக்குப் பல்வேறு விதமாக ஏற்படும் இடையூறுகளையும், துன்பங்களையும் கவிதை வழியாகத் துடைக்க முயற்சி செய்கிறார் கவிஞர்.

**இல்லறச் சுமை**

திருமணமாகி, கணவன் வீட்டிற்கு வந்துவிட்ட பெண்ணிற்கு ஏற்படும் துன்ப நிலையைக் கவிஞர் தம் கவிதையில் சுட்டிக்காட்டுகிறார்.

"பாவம் மனைவி!
இந்த
இல்லறக் கிரிக்கெட்டில்
கட்டிலறைக்கும்
சமையறைக்கும் ரன்கள் எடுத்தெடுத்து
ரணமாய்ப் போனவள்" (தி.எ.தீர்., பக்.18)

என்பதில் திருமணத்திற்கு முன்பு பெண்ணின் உடல் இருந்த நிலையும், திருமணத்திற்குப் பின்பு குடும்பச் சுமையேற்ற பெண்ணின் உடல் நிலையும் உணர்த்தப்படுவதை அறிகிறோம்.

**குடும்பச் சூழலும் அலுவலகச் சுமையும்**

குடும்பச் சூழலுக்காகப் பணிக்குச் செல்லும் மகளிரின் வாழ்வில் சிக்கல்கள் பல ஏற்படுகின்றன. குடும்பச் சுமையோடு அலுவலகப் பொறுப்பும் அவர்களது பணியும் இரட்டிப்பாகின்றது. இந்நிலையைக் கவிஞர் தம் கவிதையில்,

"வீட்டுத் தளைகள்
மாட்டியிருந்த கைகளில்
இப்போது
சம்பளச் சங்கிலிகள்"

என்றும்,

"காலையில்
கடிகாரத்தின் அலாரத்தையும்
குழந்தையின் அழுகையையும்
நிச்சயமாய் அவளால்
நேசிக்க முடியாது"

என்றும்,

"அன்புக்கு நேரமில்லை
ஆதலால்
காட்டவேண்டிய பாசத்தை

அவள்
ஞாயிற்றுக் கிழமைக்குத்
தள்ளிப் போடுகிறாள்" (இன்.தே.கீ., ப.45)

என்றும் வெளிப்படுத்துவதன் வழியாக அறியலாம்.

**அழுக்குப் படிந்த சமுதாயம்**

சமூகம் ஒரு விதவையின் கூந்தலில் உள்ள பூக்களை மட்டுமே புறக்கணிக்க முடியும். அவள் கண்களிலிருந்து இதயத்திற்குள் சொட்டும் கண்ணீருக்குக் காவல் நிற்பவள் யாருமில்லை என்ற வருத்தத்துடன்,

"சமுதாயம்
அவளைச்
சுத்தப்படுத்துவதாய்
தன்னை
அழுக்குப்படுத்திக் கொள்கிறது" (தி.எ.தீப்பு. பக்.62)

என்ற கவிதையில் கணவனை இழந்த பெண்களின் நிலையைக் கூறி, சமூகத்தின் மீது கோபப்படுகிறார்.

**கைம்மை**

விதவையின் துன்ப நிலையை விளக்கி, அவர்களின் மறுமணத்தையும் வற்புறுத்துகிறார். தன் கணவர் இறந்த நிலையில் அவனது அன்பு மனைவி துடி துடித்து அழும் அவலக் காட்சியினைக் கவிஞர்,

"நேத்து வரை நெத்தியிலே
தொட்டு வைக்க பொட்டு இல்ல
பொழுது விடுஞ்சதயா
பொட்டு வைக்க நெத்தி இல்ல"

என்றும்,

"பொட்டழிச்சுப் பூவழிச்சுப்
புலம்பவிட்ட பாவிகளே
இரத்தத்தில் கை கழுவ
நான் செஞ்சே பாவமென்ன?" (இரத்ததானம், ப.73)

எனச் சித்திரிக்கின்றார்.

**முடிவுரை**

பெண்ணின் உலகம் 'குடும்பம்' என்னும் எல்லைக்குள் கட்டுப்பட்டு விடுகிறது. பெண்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களைத் துடைக்க முன்வர வேண்டும். 'பெண்ணியம்'





என்பது பெண்களின் உரிமைகளைப் பெற அவர்கள் சார்பாக வாதாடுவது போராடுவது ஆகும். பெண்கள் தங்கள் மீது திணிக்கப்படும் ஆணாதிக்க நிலையையும், அடிமைத் தனங்களையும் பொறுமையோடு சகிக்காது, துணிவுடனும், தன்னம்பிக்கையுடன் எதிர்க்கவும், புரட்சி செய்யவும், ஒன்றுபடவும் வேண்டும். அப்போது தான் பெண்கள் முழுமையான மெய்யான விடுதலையும் புத்துணர்ச்சியும் பெற முடியும் என்று கவிதையில் தம் கருத்தை ஆணித்தரமாக அடையாளப்படுத்துகிறார்.